ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2476/25 - 2026 පෙබරවාරි මස 18 වැනි බදාදා - 2026.02.18
*2476/25 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 18 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**08 ஆவது திருத்தம்**

இலங்கைத் திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு

2010, செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிய 1670/32 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும். பின்வரும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தியமைக்கப்பட்ட ஏற்பாடுகள் 2026.01.01 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்பெறும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும்.

பகிரங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

**டப்ளியூ.எச்.எம்.எம்.சீ.கே.தயாரத்ன,**
செயலாளர்,
பகிரங்க சேவை ஆணைக்குழு.

2026, பெப்புருவரி 13.

**பகுதி I**

திருத்த இலக்கம் 1 – 2012, நவெம்பர் மாதம் 09 ஆம் திகதிய 1783/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 2 – 2013, யூன் மாதம் 28 ஆம் திகதிய 1816/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 3 – 2016, நவெம்பர் மாதம் 11 ஆம் திகதிய 1992/77 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

1A - G 46317- 04 (2026/02)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

திருத்த இலக்கம் 4 – 2019, ஓகத்து மாதம் 20 ஆம் திகதிய 2137/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 5 – 2020, ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதிய 2196/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 6 – 2021, ஏப்பிறல் மாதம் 21 ஆம் திகதிய 2224/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை
திருத்த இலக்கம் 7 – 2022, செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதிய 2299/65 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை

**பகுதி II**

08. **வினைத்திறன்காண் தடைதாண்டல்**

சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு மேற்கொள்ளப்பட்ட 3 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 8.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் 3 ஆம் வினைத்திறன்காண் தடைதாண்டலின் தன்மையின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள "இயலுமை விருத்தி மட்டம் I பாடநெறி", "இயலுமை விருத்தி மட்டம் III பாடநெறி" எனத் திருத்தியமைக்கப்படுகிறது. ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

10. **தரம் உயர்த்துதல்**

10.1.1.1. இன் கீழ் பின்வரும் தகைமையும் புதிதாக உள்ளடக்கப்படுகின்றது.

(vii) இயலுமை விருத்தி மட்டம் - I பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

10.2.1.1 இன் கீழ் பின்வரும் தகைமையும் புதிதாக உள்ளடக்கப்படுகின்றது.

(vi) இயலுமை விருத்தி மட்டம் - II பாடநெறியைப் பூர்த்தி செய்திருத்தல்.

12. II. **நிபுணத்துவ அபிவிருத்தி**

12. II. (ஆ) இன் கீழான சேவைக்காலப் பயிற்சிக்குரிய ஏற்பாடுகளுக்குப் பதிலாகப் பின்வரும் ஏற்பாடுகள் பதிலீடு செய்யப்படுகின்றன. ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

(ஆ) **இயலுமை விருத்திப் பாடநெறிகள்**

i. தரம் III உத்தியோகத்தர்கள் தரம் II இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்கு முன்னர் இயலுமை விருத்தி மட்டம்-I பாடநெறியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

ii. தரம் II உத்தியோகத்தர்கள் தரம் I இற்குப் பதவியுயர்த்தப்படுவதற்கு முன்னர் இயலுமை விருத்தி மட்டம் - II பாடநெறியைப் பூர்த்தி செய்தல் வேண்டும்.

EOG 02 - 0155